ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1768/36 - 2012 ජූලි මස 27 වැනි සිකුරාදා - 2012.07.27

*1768/36 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2012.*

### *1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்*

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ், கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன,
கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின
வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2012, யூலை 25.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் திறெஷர் சுறா பிடித்தலுக்கான தடை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் இலங்கை கடற்பரப்பில் தொழிற்படுகின்ற அல்லது ஆழ்கடலில் தொழிற்பட்டு இலங்கைத் துறைமுகமொன்றில் நங்கூரமிடப்படும் மீன்பிடி வள்ளத்திற்கு ஏற்புடையதல் வேண்டும்.

3. ஆளெவரும் (திறெஷர் சுறா என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) அலோபீடோ குடும்பத்தின் திறெஷர் சுறா இனத்தை ஏதேனும் மீன்பிடித்தொழிற்பாட்டில், பொழுதுபோக்கு சார்ந்த அல்லது விளையாட்டு மீன்பிடித்தலில் ஈடுபடும்போது பிடித்தலாகாது.

4. மீன்பிடி வள்ளமொன்றின் சொந்தக்காரர் அல்லது பொறுப்பாளர் எவரும் திறெஷர் சுறாவின் ஏதேனும் பாகத்தை அல்லது முழு உடலை வள்ளத்தில் வைத்திருத்தலோ, கப்பலிலிருந்து வேறு கப்பலுக்கு மாற்றுதலோ தரையில் இறக்குதலோ, களஞ்சியப்படுத்தலோ, விற்றலோ அல்லது விற்க முனைதலோ ஆகாது.

5. பின்வருவன மீன்பிடி வள்ளமொன்றின் சொந்தக்காரரின் அல்லது பொறுப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-


(அ) இடைநேர்விளைவாக பிடிக்கப்படும் திறெஷர் சுறாவை இயலுமானளவு செயற்பாட்டுக்குகந்த விதமான ஏதேனும் தீங்கின்றி கடலில் விடுவித்தல் ; அத்துடன்

(ஆ) அந்நோக்கத்திற்கென பேணப்படும் பயண விபரக்குறிப்பேட்டில் திறெஷர் சுறாவின் எல்லா இடைநேர்விளைவான பிடிப்பு மற்றும் உயிருடனான விடுவிப்பு பற்றி பதிவு செய்தல் .

6. ஆளெவரும் திறெஷர் சுறாவின் ஏதேனும் மாதிரியை வள்ளத்தில் வைத்திருத்தலோ, கப்பலிலிருந்து வேறு கப்பலுக்கு மாற்றுதலோ, தரையில் இறக்குதலோ, களஞ்சியப்படுத்துதலோ, விற்றலோ அல்லது விற்க முனைதலோ ஆகாது.


7. அலோபீடோ குடும்பத்தின் இனங்கள் இதற்கான அட்டவணையில் காட்டப்படக்கூடியவாறான அலோப்டியஸ் வல்பினுஷ் (திறெஷர் சுறா), அலோப்டியஸ் சுப்பசைசிற்றி ஓசஸ் (பிகியே திறெஷர் சுறா) மற்றும் அலோப்டியஸ் பீஆஹிகுஸ் (பிலெஜிக் திறெஸர் சுறா) என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

Shedule (அட்டவணை)




**Alopius vulpinus**

Thresher shark Kasa Mora (அலோப்பிராஸ் வல்பினுஸ்)



**Alopius superciliosus**

Bigeye Thresher shark Kasa Mora
(அலோப்பிராஸ் சுப்பர் சைசிற்றி ஓசஸ்)



**Alopius pelagicus**

Pelagic Thresher shark Kasa Mora
(அலோப்பிராஸ் பீஆஹிகுஸ்)



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.